உ

சிவமயம்.

தண்ணீர்மலைவடிவேலர்

பஞ்சரெத்தினம்

இஃது

கொழும்பைச்சேர்ந்த சலாபடிஸ்திரிக்டு முனீச்சுராம்
சித்தாந்த வித்தியாசாலை மனேஜ்ஜரும் உபாத்தியா
யருமாகிய

யாழ்ப்பாணம் பரித்தித்துறை புலோலி

S. N. கணேசம்பிள்ளை அவர்களால்

இயற்றி

பினாங்கில்

சர்வதேச சப்பந்த அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது

பராபவ௵ தை௴

உ

சிவமயம்.

தண்ணீர்மலைவடிவேலர்

பஞ்சரெத்தினம்

இஃது

கொழும்பைச்சேர்ந்த சலாபடிஸ்திரிக்ட்டு முனீச்சுரம்
சித்தாந்த வித்தியாசாலை மனேஜ்ஜரும் உபாத்தியா
யருமாகிய

யாழ்ப்பாணம் பருத்தித்துறை புலோலி

S. N. கணேசம்பிள்ளை அவர்களால்

இயற்றி

பினாங்கில்

சர்வதேச சம்பந்த அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது

பராபவ ௵ தை ௴

உ

சிவமயம்

சாற்றுகவிகள்

மதுரைச்ஜில்லா திருப்பத்தூர் தாலுக்கா நாச்சியாபுரம்

ரூம. வெ. ரூமநாதன் செட்டியாரவர்கள்

இயற்றியது

பூதலம் புகழு மெழிலுடைப் பிணுங்கிற் புண்ணியப் புனல்வரை யென்னு, மாதலத்தமரர் வழிபடக் கருணை வழங்கி வீற்றிருந் தருள் வள்ளி, காதலன் கமலக் கழலடிக்கியல் சேர்கவித் தொடை புனைந்தினிதணிந்தா னேதமில் புலோலி நகரயர் கணேசனெ னப் பெயர்பரித்த பாவலனே

பிணுங்கு

அதிவர்ணாச்சிரம சுவாமியவர்கள்

சொல்லியது

திருமருவு பிணுங்கு புனல் வரையான் மீது சிறந்த புலோ
லிப்பதி நாகப்பன் செல்வம்
மருவி வளர் கணேச பிள்ளை காதலோடு வரைந்த கவி
மதுரத்தை வணிகரோர்ந்து
கருதி யிவர் நடாத்திவருங் கலாசாலைக்குக் கனதனத்தை
மிகவளிப்பார் கனிவோடின்னு
மொருதரமாகிலுமிக் கவியுரையாளுே வென்றுலகிலுள்ளார்
மிகவாஞ்சை யுளத்தில் வைப்பார்



உ

சிவமயம்.

பினாங்கு

தண்ணீர்மலை வடிவேலர்

பஞ்சரெத்தினம்

காப்பு

வெண்பா

சிந்தைக்குண்மாறாச் சிரத்தையொடு வானோர்கள்
வந்திக்குந் தண்ணீர் மலைக்குகனைச்———சிந்தித்துச்
செந்தமிழாற் பஞ்சரொத்தினஞ் செப்புதற்கு நல்லருட்
டொந்தி வயிற்றோன் றுணை.

அவையடக்கம்

உலகியாவையும் பொருளென மதித்திடுமுறவோர்
சலமுறூர் பிழையிருக்கினுந் தக்கவையமைத்தே
நிலமெலா மிகப்பரவுமாறிதை நிலை நிறுத்தித்
தலமை நூலினென்றாகவே புரிவது தகையே

போற்றிவிருத்தம்

இன்னமுதே போற்றியிணையிலியே போற்றி
    இன்பமுமூர்மனை சுற்றமானாய் போற்றி
மன்னிய சற்குருவாகியன்பர்க் கெல்லாம்
    வாழ்வுற வாழ்வளித்தாளு மணியே போற்றி
அன்னையிலு நல்லன்பா யென்னைகாத்தே
    யாண்டடிமைக் கொண்டருளுமரசே போற்றி
துன்னுமறை நான்கினுக்கு மரியாய் போற்றி
    தூய தண்ணீர் மலையானே போற்றி போற்றி ௧

அறிவேதுமில்லாத கடையேனென்னை
    யறிந்தருட்கண் வைத்தின்னேயாழ்வாய் போற்றி
குறியேதுமில்லாத வடியார் செல்வக்
    கூட்டத்திலெனைச் சேர்க்குங்குருவே போற்றி
முறியாத வானந்தமூறும் வெள்ள மூலமே
    போற்றி யருண் முகிலே போற்றி
சிறியேனையும் பொருளாய்ச் சேர்த்தேயாழ்வாய்
    சிறந்த தண்ணீர் மலையானே போற்றி போற்றி ௨

கருவுருவிற் பிறந்தடியேன் கழியாவண்ணங்
    கருணை வடிவாகிய நின்கழலே போற்றி

உருகு மனத்தடியருடனெனையுமாழ்வாய்
உண்மையனே கழல் போற்றி யுடையாய் போற்றி
பொருவதறத் திகழொளியாயுள்ளத்தூறும்
பொற்புடைய பேரமுதே புனிதா போற்றி
தெரிவருநற்றேவர் கடந் தேவே போற்றி
சிறந்த தண்ணீர் மலையானே போற்றி போற்றி ௩

என்று மொருபடித்தாகி நின்றாய் போற்றி
எவ்வுயிர்க்கு முயிராகி யிருந்தாய் போற்றி
பொன்று முடம்பெடுத்துழல் வென்றன்னை ஞானப்
பூரணத்தால் வேதிக்கும புனிதா போற்றி
குன்றவிலா மெய்ஞ்ஞானசகுருவே போற்றி
குரைகடலே போற்றி குணக்குன்றே போற்றி
சென்றடையாப் பதமளிக்குந் தேவே போற்றி
சிறந்த தண்ணீர் மலையானே போற்றி போற்றி ௪

மாறாத பத்தியினுக் கெளியாய் போற்றி
மதியிலேன்றனை யாளுமன்னே போற்றி
வேறேதுமில்லாத விளைவே போற்றி
வித்தகனே போற்றி யொளிவிமலா போற்றி
யாறாத வானர் தத்தடியார் தங்களகத்துளே
திருவிளையாட்டயர் வா போற்றி
தேறாதாருண் நின்றாந் தெளியாய் போற்றி
சிறந்த தண்ணீர் மலையானே போற்றி போற்றி ௫

போற்றி விருத்தம்

முற்றிற்று

திருநாவுக்கரசு சுவாமிகள்
திருவாய் மலர்ந்தருளிய
நமச்சிவாயப் பதிகப்பண்

பண் காந்தாரம்

நெஞ்சு கந்துனை நேசித்த வானவர்க்
கஞ்ச லென்ற வருளறிந்தேஐயா
தஞ்ச மென்றுன் சரண் கெதியாகினேன்
விஞ்சு தண்ணீர் மலைவடி வேலனே ௧

இல்லை யுண்டென்றெவர் பக்கலாயினுஞ்
சொல்லவே யறியாத தொழும்பன் யான்
செல்லவே றொருதிக்கறியே னெலாம்
வல்லனே தண்ணீர் மலை வாசியே ௨

காக்கு நின்னருட் காட்சியல்லா லொரு
போக்குமில்லையென் புந்திக்கிலேசத்தை
நீக்கியாளுகை நின்பரமன் பினர்
ஆக்கமான தண்ணீர்மலை யண்ணலே ௩

வாழ்த்து நின்னருள் வாரம் வைத்தாலன்றிப்
பாழ்த்த சிந்தைப் பதகனு முய்வனோ
சூழ்த்து நின்ற தொழும்பரை யானத்தத்
தாழ்த்துந்தண்ணீர்மலை வடிவேலனே ௪

உற்றவேளைக்குறு துணை நீயெனப்
பற்றி வந்தவிப் பாவியைப் பார்ப்பது
குற்றமென்றுன் குலத்தவர் சொல்வரோ
வற்றிடாத தண்ணீர்மலை வள்ளலே ௫

நமச்சிவாயப் பதிகபண்
முற்றிற்று

திருநாவுக்கரசு சுவாமிகள்
திருவாய் மலர்ந்தருளிய
திருத் தாண்டகப்பண்

அரியானை யருந்துணையை யல்லறீர்க்கு மருமருந்தை யமுதத்தை
யமரோராலுந், தெரியாதவரும் பொருளைத் தேனைப் பாலைத் தீங்
கரும்பினின் சுவையைத் தெய்வலோகத், துரியானை யுத்தமனை
யுண்மையானை யுயிர்க்குயிராயிருப்பானை யுலகுக்கெல்லாம், பெரி
யானைப் பெருந்தகையைப் பிஞங்கூ ரானைப்பேசாதார் பிறந்
துழலும் பிணிக்காவாரே க

மூலநோய் தீர்க்குமுதல்வன் றன்னை மூவிரண்டு முகமொன்றாய்
முளைத்தான் றன்னைப், பாலகனாய்க் கவுரி முலைப்பாலுண்டானைப்
பரந்த புகழுடையானைப் பாவந் தீர்க்குங், கோலமயில் வாகனனை
க் குமரன் றன்னைக் குறவர் குடிசையிற் புகுந்த கொள்கை
யானைப், பீலி முடியோன் மகவைப் பிஞங்கூரானைப் பேசாதார்
பிறந்து ழலும் பிணிக்காவாரே உ

புள்ளானுக்கருமருகனானைத் தன்னைப் புலவர் சிகாமணி தன்னைப்
புகழ்வார் சித்தத், துள்ளானை வெளியானைக் காற்றானையுமபர்களு
மூணர் வரியவுரு வானானைக், கள்ளேந்து நறுமலர் போன
நாறும மேனிக் கற்புறு மங்கையரிருவர் காதலென்று, முள்ளா
னைப் பிஞங்கூருக்குரியான் றன்னை யுரையாதார் பிறவிக்கேயுள்ளா
வாரோ. ௩

இருளாய வுள்ளத்தினிருளை நீக்கி யிடர்ப்பாவங் கெடுத்தேனை
யேழை யுய்யத், தெருளாத சிந்தைதனைத் தெருட்டித் தன்பொற்றி
ருவடியைத் தெரிசிக்கச் சிந்தை தந்த, வருளானை யாதிமாதவத்
துளானை யாறங்க நால் வேதத் தப்பால் நின்ற பொருளானைப்
பொன்விளையும் பிஞங்கூரானைப் பேசாதார் பிறந்துழலும் பிணி
க்காவாரே ௪

பத்திமையாற் பணிந்தடியேன்றன்னைப் பன்னாட் பா மாலைபாட
ப்பயில் வித்தானை யெத்தேவு மேத்துமிறைவன்றன்னை யெம்மா
னையென்னிதயத்துள்ளே நின்று, சித்திதருஞ் செழுஞ் சுடரைச்
செல்வக் குன்றைச் சேணாட்டுக் கதிபதியைச் சிரமைந்தான்
றன், புத்திரனைப் பொன் விளையும் பிணங்கூரானைப் பேசாதார்
பிறந்துழலும் பிணிக்காவரோ ௫

திருத்தாண்டகப்பண்

முற்றிற்று

சுந்தரமூர்த்தி சுவாமிகள்
திருவாய் மலர்ந்தருளிய
திருவாரூர்ப்பண்

பண் தக்கேசி

குண்டலந்திகழ் காதுடையானைக்
கூவுங் கோழிக் கொடியுடையானை
வண்டுமொய் குழல் வள்ளியை விரும்பி
வளையல் விற்பவன் வேடம் பூண்டானை
கெண்டை போன் விழித் தெய்வத யானை
கெழுமியேத்தி வழிபடப் பெற்ற
அண்டர் கோனைத் தண்ணீர்மலையானை
ஆவல்தீரக் கண்டடி தொழுதேனே ௧

அல்லலுள்ளன தீர்த்திடுவானை
யடைந்தவர்க்கமுதா யிடுவானை
வெல்லும் வேற்படை யொன்றுடை யானை
வேங்கை மரமாய் முளைத்துநின்றானை
எல்லையில் புகழுடைத் தெய்வயானை
யென்று மேத்தி வழிபடப் பெற்ற
நல்ல தண்ணீர் மலையி லுள்ளானை
நாடி நானுங் கண்டடி தொழுதேனே ௨

கற்பகத் தினைக் கங்கை யிலுதித்த
கார்த்திகேயனைக் கனகமாமணியை
நற்பதத்தென யேற்றி வைப்பானை
நாளு மென்னிருதயத்திருப்பானை
யற்புதப் புகழுடைத் தெய்வ யானை
யாதரித்து வழிபடப் பெற்ற
தற்பரனைத் தண்ணீர்மலையானைத்
தாழ்மையோடு கண்டடி தொழுதேனே க

பட்டிலாய வோருடைதரித்தானைப்
பாடித் தொழும் பத்தர்க் கன்புடையானை
நெட்டிலே யலையாது செய்வானை
நீலமாமயிலேறும்பொற்றூளனை
மட்டிலாப்புகழுடைத்தெய்வ யானை
மருவியேத்திவழிபடப்பெற்ற
செட்டிதன்னைத்தண்ணீர்மலையானைச்
செவ்விதாககண்டடிதொழுதேனே உ

வெந்தநீறணியுந்திருநுதலானை
வேதனுக்குபதேசஞ்செய்தானைப்
பந்தமானதொல்வினையறுப்பானைப்
பாவிப்பார்மனம்பரவிக்கொண்டானை
யந்தமில் புகழுடைத் தெய்வயானை
யாதரித்து வழிபடப் பெற்ற
கந்தவேளைத் தண்ணீர்மலையானைக்
காதலோடெங் கண்டடி தொழுதேனே ௩

திருவாரூர் பண்

முற்றிற்று

திருஞான சம்பந்த சுவாமிகள்
திருவாய் மலர்ந்தருளிய
திருப்பளனப் பண்

பண் தக்கேசி

பெருமை நிதியே மயிலேறும் பெருமானே தண்ணீர் மலையி
னருமை மணியே யென் கண்ணே யரசே யுன்றனா றெழுத்தை
யொருமை மனத்திலனு தினமு முச்சரித்துனடிபணிந்தா
லிருமை வளனு மெய்து மிட ரென்பதொன்றும் வாராதே க

துன்னு மறையின் முடிவிலொளிர்தூய தண்ணீர் மலைத் திருவே
அன்னையனையாயென் னுயிரேயப்பனே யுன்னாறெழுத்தை
உன்னிமனத்திலனு தினமுமுச்சரித்துனடி பணிந்தாற்
பொன்னினுலகவாழ் வெய்தும் பிறவித்துன்பம் பொடிபடுமே உ

சார்ந்தவடியார்க் கருள்புரியுந் தருவே தண்ணீர் மலைக்குருவே
கூர்ந்த வேலொன்றுடையவனே குமரா வுன்றனாறெழுத்தை
யோர்ந்து மனத்திலனு தினமு முச்சரித் துனடி பணிந்தா
லார்ந்தஞான முறுமழியாவலக் கணொன்றுமழிந்திடுமே ங

அழியாப் பொருளே யாரமுதே ஐயா தண்ணீர் மலை முருகா
கழியாப்புகழ் சேர்குறமாதின் கணவா வுன்றனாறெழுத்தை
ஒழியா மனத்திலனு தினமு முச்சரித்துனடி பணிந்தாற்
பழியாவின்பமதுபதியு பனிமை யொன்றும பதியாதே ச

தோன்று ஞானச் சுடர் விளக்கே தூயதண்ணீர் மலைக் கரும்பே
ஆன்றோர்புகழுமருமருந்தே யண்ணா வுன்றனாறெழுத்தை,
யூன்று மனத்திலனு தினமு முச்சரித்துனடி பணிந்தா
லீன்றணிகருமருளடையு மிக்க ணொன்றுமடையாதே ரு

வாழி விருத்தம்

திரு மருவு பிணுங்கு புனல்வரையும் வாழி
    திங்கடொறும் மழை பொழிந்து சிறந்தும் வாழி
உருமருவு மரசரொடு மறையோர் வாழி
    ஓங்கு சைவமதமோடு அடியார் வாழி
கரு மருவு பசு மடவார் கணங்கள் வாழி
    கலையுணர் மெய்ப்புலவரொடு வேதம் வாழி
அருளளித்தாட் கொள்ளும் வடிவேலன் சீர்த்தி
    ஆற்றுபஞ்சரெத்தினமும் வாழி வாழி

முற்றிற்று.

தருமசீலரே

கொழும்பு சலாப டிஸ்திரிக்டு முனீச்சுரத்திலுள்ள சித்தாந்த வித்தியாசாலைத் திருப்பணி வேலையை முடித்தற்கு பலராலுமுபகரிக்கப்பட்ட பொருள் போதாமையால் தரும சீலர்களாகிய உங்களிடத்தில் இயன்ற பொருளுதவி பெற்றுக்கொள்ளுமாறு இவ்விடத்தில் வந்திருக்கின்றேன்.

பிரபுக்களாகிய நீங்களொவ்வொருவரும் என்மீது தயவுகூர்ந்து எனதுகோரிக்கையை நிறைவேற்றுவதோடு இதனாலெய்தும் பலனைப் பங்கிட்டுக் கொள்ளுமாறு திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்

இங்ஙனம்

பொதுநன்மையை விரும்பிய
S. N. கணேசம் பிள்ளை